QB365 Student Learing Managemnet System

Exam Name: வரலாறு - மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும் - வரலாற்றுக்கு முந்தைய காலம் -பயிற்சி

Std: 9th Standard - Social Science

Chapter: வரலாறு - மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும் - வரலாற்றுக்கு முந்தைய காலம்

Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

கோடிட்ட இடங்களை நிரப்புக

1.கோடரிகளும் பிளக்கும் கருவிகளும் _____ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்

2.கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும்_____ தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன.

3.பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் _____ எனப்படும்.

4.கை கோடரிகளும் வெட்டுக் கருவிகளும் _____ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்.

5.வரலாறு எழுதுவது பண்டைய_____ காலத்தில் தொடங்கியது.

6.இத்தாலியில் அமைக்கப்பட்ட_____ அருங்காட்சியகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும் மிகப் பழமையான அருங்காட்சியகமாகும்.

7.மனித மூதாதையர்களால் உருவாக்கப்பட்ட தொடக்ககாலக் கற்கருவிகள் கென்யாவில் _____ என்ற இடத்தில் கிடைத்துள்ளன.

8._____ என்ற குரங்கினத்திலிருந்துதான் நவீன மனித இனம் தோன்றியது.

9.எழுத்துமுறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் _____ என்று குறிப்பிடப்படுகிறது.

10._____ என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும்.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

11.மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
(a) கொரில்லா (b) சிம்பன்ஸி (c) உராங் உட்டான் (d) பெருங்குரங்கு

12.வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்
(a) பழைய கற்காலம் (b) இடைக்கற்காலம் (c) புதிய கற்காலம் (d) பெருங்கற்காலம்

13.பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் _____ ஆவர்.
(a) ஹோமோ ஹேபிலிஸ் (b) ஹோமோ எரக்டஸ் (c) ஹோமோ சேபியன்ஸ் (d) நியாண்டர்தால் மனிதன்

14.எகிப்து, இஸ்ரேல்-பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி _____ எனப்படுகிறது.
(a) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு (b) பிறைநிலப் பகுதி (c) ஸோலோ ஆறு (d) நியாண்டர் பள்ளத்தாக்கு

15.சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் ____ கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்.
(a) நுண்கற்காலம் (b) பழங்கற்காலம் (c) இடைக் கற்காலம் (d) புதிய கற்காலம்

16.கூற்று: தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
காரணம்: நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது
(a) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது. (b) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
(c) கூற்று சரி; காரணம் தவறு. (d) கூற்றும் காரணமும் தவறானவை .

17.'ஆஸ்ட்ரோலாபித்திஸைன்' என்பதற்கு_____ என்று பொருள்.
(a) தெற்கத்திய மனிதக் குரங்கு (b) வடக்கத்திய மனிதக் குரங்கு (c) மேற்கத்திய மனிதக் குரங்கு (d) கிழக்கத்திய மனிதக் குரங்கு

18.'வரலாற்றின் தந்தை' என்று கருதப்படுபவர்
(a) அலெக்ஸாண்டர் (b) டார்வின் (c) ஹெர்பர்ட் ஸ்பென்சர் (d) ஹெரோடோடஸ்

19.உலகின் மிகப்பழமையான பல்கலைக் கழக அருங்காட்சியகம்
(a) கேபிடோலைன் (b) ஆஸ்மோலியன் (c) உஸ்மானியா (d) ஆக்ஸ்போர்டு

20.நமது இனத்தின் பெயர்.
(a) ஹோமோ சேப்பியன்ஸ் (b) ஹோமோ எரக்டஸ் (c) ஹோமோ ஹெபிலிஸ் (d) ஹோமினின்

21.உடற்கூறியல் ரீதியாக நவீன மனிதர்கள் சுமார்_____ ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகக் கூறப்படுகிறது.
(a) 5 லட்சம் (b) 4 லட்சம் (c) 3 லட்சம் (d) 2 லட்சம்

22.ஆறுகள் படிய வைத்த வளமான மண்
(a) வண்டல் மண் (b) கரிசல் மண் (c) செம்மண் (d) பாலை மண்

23."கற்கருவித் தொழிலகம்" என்று அழைக்கப்படுவது.
(a) மும்பை (b) கொல்கத்தா (c) சென்னை (d) டெல்லி

24.i) எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.
ii) வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.
iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.
iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.
(a) (i) சரி (b) (i) மற்றும் (ii) சரி (c) (i) மற்றும் (iv) சரி (d) (ii) மற்றும் (iii) சரி

25.i) செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.
ii) புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.
iii) புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.
iv) விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.
(a) (i) சரி (b) (ii) சரி (c) (ii) மற்றும் (iii) சரி (d) (iv) சரி

26.நாம் _____ தொழில்நுட்ப காலத்தில் வாழ்கிறோம்.
(a) போக்குவரத்து (b) தகவல் (c) பண்பாடு (d) நாகரிகம்

27.மனிதர்களின் வரலாற்றை _____ வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.
(a) கோள்களின் (b) புவியின் (c) சூரிய குடும்பத்தின் (d) நீர்நிலைகளின்

28.மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளும் இடம் _____
(a) தொல் மானுடவியல் (b) நுண்ணுயிரியல் (c) நிலவியல் (d) தொல்லியல்

29.புவி சுமார் _____ பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது.
(a) 5.59 (b) 4.15 (c) 4.54 (d) 5.52

30.ஆஸ்ட்ரோலாபித்திஸைன் என்பதற்கு _____ என்று பொருள்.
(a) தெற்கத்தில் மனிதக் குரங்கு (b) இடைத் தொல்லுயிரூழி (c) நுண்ணுயிரிகள் (d) டைனோசர்

31.சுமார் 600 முதல் 542 மில்லியன் ஆண்களுக்கு முந்தைய _____ இல் பல செல் உயிரினங்கள் முதலில் தோன்றின.
(a) பழந் தொல்லுயிரூழி (b) தொல்லுயிரூழி (c) இடைத் தொல்லுயிரூழி (d) பாலூட்டிகள் காலம்

32._____ காலகட்டத்தில் டைனோஸர்கள் வாழ்ந்தன.
(a) தொல்லுயிரூழி (b) இடைத் தொல்லுயிரூழி (c) பாலூட்டிகளின் (d) பழந் தொல்லுயிரூழி

33.வரலாறு எழுதுவது பண்டைய _____ காலத்தில் தொடங்கியது என்று சொல்லலாம்.
(a) எகிப்தியர் (b) கிரேக்கர்கள் (c) ரோமானியர்கள் (d) இந்தியர்கள்

34.வரலாற்றின் தந்தை _____ ஆவார்.
(a) ஹெரோடோடஸ் (b) ஹெர்குலிஸ் (c) அரிஸ்டாடில் (d) சாக்ரடீஸ்

35.என்னிகாய்டி - நன்னா அருங்காட்சியகம் _____ வில் அமைக்கப்பட்டது.
(a) சுமெரியா (b) பாபிலோனியா (c) மெசபடோமியா (d) பல்கேரியா

36._____ இல்அமைக்கப்பட்ட கேபிடோலைன் அருங்காட்சியகம்தான் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கும் மிகப் பழமையான அருங்காட்சியகமாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.
(a) ஜெர்மனி (b) பிரான்ஸ் (c) இத்தாலி (d) பெல்ஜியம்

37._____ தோற்றம் மனித வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனையாகும்.
(a) கால்நடை வளர்ப்பின் (b) வேட்டையாடுதலின் (c) எழுத்துத்துறையின் (d) ஆபரணங்களின்

38.புதைப்படிவுகள் குறித்த ஆய்வு _____ என்று அழைக்கப்படுகிறது.
(a) நிலவியல் (b) தொல்பொருள் அறிவியல் (c) புதைபடிவ ஆய்வியல் (d) நுண்ணுயிரியல்

39.கூரிய வெட்டுமுனை உள்ள கல்லால் ஆன உளிக்கு _____ என்று பெயர்.
(a) செதில் (b) கருக்கல் (c) பியூரின் (d) பிளேக்ஸ்

40.குரோ-மக்னான் என்றழைக்கப்படும் மனிதர்கள் _____ வில் வாழ்ந்தார்கள்.
(a) ஐரோப்பா (b) கென்யா (c) ஆசியா (d) ஆப்பிரிக்கா

41._____ காலகட்டத்தில் குரோ மக்னான் என்ற மனிதர்கள் வாழ்ந்தார்கள்.
(a) கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு (b) மேல் பழங்கற்காலப் பண்பாடு (c) இடைப் பழங்கற்காலப் பண்பாடு (d) இடைக் கற்காலப் பண்பாடு

42.கீழ்ப் பழங்கற்காலப் பண்பாட்டின் கற்கருவிகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இடங்களில் _____ ஒரு இடம்.
(a) அயப்பாக்கம் (b) அதிரம்பாக்கம் (c) கொட்டிவாக்கம் (d) மேடவாக்கம்

43.மனிதர்களின் சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது
(a) செல்வம் (b) உடல்நலம் (c) வாழ்க்கை முறை (d) அறிவாற்றல்

44.கோதுமை, பார்லி, பட்டாணி ஆகியவை _____ ஆண்டுகளுக்கும் முன்பே பயிரிடத் தொடங்கப்பட்டுவிட்டன.
(a) 4,000 (b) 6,000 (c) 8,000 (d) 10.000

45.உலகில் மனித மூதாதையர்கள் வசித்த மிக முக்கியமான இடங்களில் ஒன்று _____
(a) மணிமுத்தாறு (b) அடையாறு (c) பாலாறு (d) கொசஸ்தலையாறு

QB TM Study 365 Material
QUESTION BANK 365

46.i) வரலாறு எழுதுவது பண்டைய எகிப்தியர் காலத்தில் தொடங்கியது.
ii) ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அமெரிக்காவில் இருக்கிறது.
iii) 1 மில்லியன் என்பது 10 லட்சம்
iv) அச்சூலியன் கருவிகள் சென்னைக்கு அருகில் கிடைத்துள்ளன.
(a) i) சரி (b) ii) சரி (c) iii) மற்றும் iv) சரி (d) i) மற்றும் iii) சரி

47.கூற்று : கல்லறை, கற்திட்டைகளில் போர்ட் ஹோல் எனப்படும் இடுதுளை ஒன்று ஒரு புறம் இடப்பட்டிருக்கும்.
காரணம் : இறந்தவரின் ஆன்மா இந்த துளையின் வழியே வந்து செல்வதற்காக இப்படி அமைக்கப்பட்டது.
(a) கூற்று சரி; காரணம் தவறு (b) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
(c) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை. (d) கூற்றும் காரணமும் தவறானவை.

48.கூற்று : பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கல்வெட்டுக் குறிப்புகள் அவரது பேரரசுக்கு வெளியே இருந்த சேரர்கள். சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.
காரணம் : தமிழகத்தைச் சேர்ந்த பழங்கால அரசர்கள் அரசியல் நோக்கில் அவர்களின் ஆட்சியை இரும்புக்காலத்தில் துவக்கினார்கள்.
(a) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது. (b) கூற்றும் காரணமும் சரி: ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
(c) கூற்று சரி; காரணம் தவறு. (d) கூற்றும் காரணமும் தவறானவை.

49.மைக்ரோலித்திக் என்பது
(a) நுண்கற்கருவிகள் (b) வெங்கலக் கருவிகள் (c) இரும்புக் கருவிகள் (d) ஆயுதங்கள்

50.இந்தியாவில் முதல் பழங்கற்காலக் கருவியை சர் இராபர்ட் புரூஸ்ஃபூட் கண்டுபிடித்த இடம்
(a) சாந்தோம் (b) மாமல்லபுரம் (c) பல்லாவரம் (d) மைலாப்பூர்